<u>முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>

**<u>O.S. No.385/2023</u>**

**<u>Witness PW 2</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குலோத்துங்கன் | தொழில் | |
| த/பெ | பாலதண்டாயுதம் | வயது | |
| ஊர் | | தேதி | 27.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (27.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>சத்தியமாக சொல்கிறேன்</u>**

வழக்கு சொத்து எனக்கு எப்படி வந்தது என்ற விவரத்தை இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கு சொதது யார் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால் ஆறுமுகம் என்பவரது கிரையம் பெறப்பட்டுள்ள சொத்துக்கள். இந்திராணி என்பவர் எனது பாட்டி. அவர்கள் பெயரிலும் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் இந்த வழக்கில் உள்ள சொத்துக்கள் அவர் பெயரில் இல்லை. 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளின் தகப்பனார் எந்த சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் பி அட்டவணை சொத்தினை கிரையம் பெற்றுள்ளார். பி அட்டவணை சொத்தில் 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றுசொன்னால் இல்லை அது நிலமாக தான் உள்ளது. அந்த நிலத்தை 3 முதுல் 6 வரையிலான பிரதிவாதிகள் தான் பிரதிவாதிகள் தான் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. பி அட்டவணை சொத்திற்கான வாய்தா வகைகளை 3 முதுல் 6 வரையிலான பிரதிவாதிகள் தான் செலுத்தி வருகிறார்கள் என்றுசொன்னால் இல்லை. பி அட்டவணை சொத்து பொறுத்து 3 முதுல் 6 வரையிலான பிரதிவாதிகள் 03.07.2013 ம் தேதியிலேயே பாகபிரிவினை செய்துகொண்டு அவர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்து தனித்தனியாக ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. பி அட்டவணை சொத்து பொறுத்து பட்டா யார் பெயரில் உள்ளது என்று நான் பார்த்துள்ளேனா என்றால் ஏழுமலை வகையறா பெயரில் உள்ளது. அவர்கள் மீது கொடுக்கப்பட்டிருந்த பட்டாவினை எங்கள் பெயரில் மாற்றம் செய்ய வட்டாட்சியரிடம் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரி 2017 ம் வருடம் தான் பட்டா பற்றிய விவரம் தெரிய வந்தது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனதுதாத்தா பாட்டிக்கு உரிமையான சொத்துக்கள் என்பதால் நான் பாக பிரிவினை கோரி தான் வழக்கு

தாக்கல் செய்ய முடியும் என்றாலும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றுசொன்னால் சரியல்ல சொத்துக்கள் அனைத்தும் தாத்தாவின் பெயரில் உள்ளதால் எனது பெரியப்பா எழுதிகொடுத்த கிரையம் செல்லாது. எனது பெரியப்பா எழுதிகொடுத்த கிரையம் செல்லாது என நான் காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றுசொன்னால் சரியல்ல. நான் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை எனது தாத்தா பாட்டி எப்பொழுது வாங்கினார்கள் என்றுசொன்னால் 1959 ல் வாங்கினார்கள். யாரிடம் வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியவில்லை. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் எந்த வருடம் புகார் கொடுத்தேன் என்றால் 2023ம் வருடம் கொடுத்தேன். பிரதிவாதிகள் எங்கள் நிலத்தில் இருந்த முள்வேளிகளை வெட்டுவதற்காக சென்றார்கள் எனது அம்மா சென்று கேட்டபோது அவரை தாக்கியதால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அந்த புகாரின் பேரில் முதல்தகவல் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஏழுமலை வகையறா பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் முதல் தகவல்அறிக்கை ஏழுமலை வகையறா என்பவரது பெயரில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல. வழக்கு பி அட்வணை சொத்தின் 1 மற்றும் 2 இன சொத்துக்களை 3 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் ஏழுமலை 1980 ல் கிரையம் பெற்றதிலிருந்து இதுநாள் வரையில்தான் தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறார் என்றுசொன்னால் இல்லை. வழக்கு பி அட்வணை சொத்தின் 1 மற்றும் 2 இன சொத்துக்களுக்கு 3 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் ஏழுமலை என்பவரது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் அது தவறான முறையில் கிரையம் பெறப்பட்டுள்ளது.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram